26th February 1966]

(சில கனம் அங்கத்தினர்கள் : நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லலாமே.)

கனம் சபாநாயகர் : இங்கிலீஷிலிருந்து மொழிபெயர்ப்பு அப்படியிருக்கிறது.

கனம் திரு. பூ. கக்கன் : கனம் சபாநாயகர் அவர்கள் சொன்னது போல் டிரான்ஸ்லேஷன் தான். மிராஊர் ரூ. 6,526 லாபத்தில் ஓடுகிறது. வடக்கநந்தல் ரூ. 6,758 லாபத்தில் ஓடுகிறது. குப்பநத்தம் மட்டும் ரூ. 643 நஷ்டத்தில் இருக்கிறது. மற்ற இடங்கள் எல்லாம் லாபத்தில் தான் ஓடுகின்றன.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் விதைப் பண்ணைகள் எல்லாம் லாபத்தில் தான் ஓடிக் கொண்டிருக்கின்றன என்றும், நஷ்டத்தில் ஓடுவது ஒன்றே ஒன்று தான் என்றும் குறிப்பிட்டார்கள். அப்படியானால் இந்த விதைப் பண்ணைகள் மூலம் எத்தனை ஏக்கர்கள் பயிர் செய்யப்படுகின்றன என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : இதற்குத் தனிக்கேள்வி வேண்டும்.

விவசாயப் பள்ளிகள்

* 119 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

தமிழ் நாட்டில் உள்ள விவசாயப் பள்ளிகளின் விபரம் என்ன, மாவட்டவாரியாக ?

The Hon. Sri P. KAKKAN : There are eleven Agricultural Schools functioning in this State as indicated below :--

Names of places and districts.

1. Paramakudi, Ramanathapuram.
2. Bhavanisagar, Coimbatore.
3. Karaiyiruppu, Tirunelveli.
4. Sakkottai, Thanjavur.
5. Kakuppam, South Arcot.
6. Papparapatti, Dharmapuri.
7. Sirukaveripakkam, Chingleput.
8. Thiruvarankulam, Tiruchirappalli.
9. Muzhucode, Kanyakumari.
10. Ootacamund, The Nilgiris.
11. Katpadi, North Arcot.

திரு. இராம. அரங்கண்ணல் : சார், இந்த விவசாயப் பள்ளிகளில் விவசாயம் சம்பந்தப்பட்ட பாடங்கள் மட்டும் சொல்லிக்கொடுக்கப் படுகின்றனவா ? அல்லது, வேறு பாடங்களோடு இணைந்து விவசாயப் பாடங்களும் சொல்லிக் கொடுக்கப்படுகின்றனவா ?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாய சம்பந்தமான பாடங்கள் தான் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

திரு. மு. சண்முகம் : இந்த விவசாயப் பள்ளிகளில் பயிற்சி பெற்றவர்கள் பயிற்சி முடிந்த பின்னால் என்ன செய்கிறார்கள்? அரசாங்கத்தினுடைய விதிகளின்படி விவசாயக் குடும்பத்திலுள்ளவர்கள் தாங்கள் பயிற்சி பெற்ற பின்னால் தங்கள் பண்ணைகளில் வேலை செய்யவேண்டும் என்றிருக்கிறது. அதன்படி நடந்து வருகிறார்களா என்று அரசாங்கம் கண்காணித்து வருகிறதா? அப்படியானால் அதன் புள்ளிவிவரம் என்ன?

கனம் திரு. பூ. கக்கன் : புள்ளிவிவரங்கள் ஒன்றும் இப்போது என்னிடமில்லை. விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இதற்கான பயிற்சிக்கு வருகிறார்கள். பயிற்சி பெற்ற பின்னால் பலரும் தங்கள் பண்ணைகளில் போய் வேலை செய்கிறார்கள். சிலர் உத்தியோகத்திலும் வந்து பணியாற்றுகிறார்கள்.

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : கனம் தலைவர் அவர்களே, கனம் அமைச்சர் அவர்கள் சொல்லிய பதிலில் மதுரையைத்தவிர மற்ற ஜில்லாக்களில் எல்லாம் இம்மாதிரி பயிற்சிப் பள்ளிகள் வைக்கப்போவதாகத் தெரிவித்தார்கள். மதுரை ஜில்லாவில் இப்போது எந்தவிதமான விவசாயப் பயிற்சிப் பள்ளியும் இல்லை. ஆகவே மதுரையில் நடப்பு வருஷத்திலாவது இரண்டு விவசாயப் பயிற்சிப் பள்ளிகளை ஆரம்பிக்க வழி செய்யப்படுமா?

கனம் திரு. பூ. கக்கன் : விவசாயப் பயிற்சிப் பள்ளிகள், விதைப் பண்ணைகள் இருக்கின்ற இடத்தில் தான் ஆரம்பிக்கப்படுகின்றன. வருங்காலத்தில் சேலத்தில் மேட்டூரிலும், மதுரையில் ஏதாவது விதைப் ப்ண்ணைக்கு அருகில் ஒன்றும், வட ஆற்காட்டில் ஒன்றும் ஏற்படுத்தலாம் என்று அரசாங்கம் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல் : விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கின்ற இந்த நோக்கில் இப்பேர்ப்பட்ட விவசாயப் பள்ளிகளை மாவட்டந்தோறும் துவக்க அரசாங்கத்திற்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. பூ. கக்கன் : அரசாங்கம் பரிசீலனை செய்து, மேலும் எந்தெந்த இடங்களில் இப்படிப்பட்ட பாடசாலை அமைப்பது தேவை என்பதைப் பார்த்து, தேவையிருந்தால் அந்த இடங்களில் ஆரம்பிப்பதற்குக் கவனம் செலுத்தப்படும்.

திரு. சா. கணேசன் : இந்த விவசாயப் பள்ளிகளில் பயிலுகின்றவர்களுக்கு வேலை வாய்ப்புக்கு என்ன உத்தரவாதம் இருக்கிறது? அல்லது எந்தத் துறையில் எந்த நிலையில் இவர்களை உத்தியோகத்திற்கு எடுத்துக்கொள்ளலாம், அல்லது எடுத்துக்கொள்ளவேண்டும் என்று ஏதாவது அரசாங்க ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே நான் இதைப்பற்றிச் சொன்னேன். விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் இந்தப் பயிற்சிக்கு வரவேண்டும் என்றிருக்கிறது. இவ்விதம் பலர் பயிற்சி

26th February 1966]

பெற்ற பின்னுல் தங்கள் பண்ணைகளை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கிருர்கள். சிலர் விவசாய இலாகாவுக்கு வந்து உத்தியோகம் பார்க்கிருர்கள். பஞ்சாயத்து யூனியன் போன்றவற்றிலும் பலர் வேலை செய்து கொண்டிருக்கிருர்கள்.

திரு. கோ. சி. மணி : இந்த விவசாயப் பள்ளியில் பயிலுவதற்கு விவசாயக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மட்டும் தான் வரலாம் என்று ஏதாவது கட்டுப்பாடு இருக்கிறதா? இல்லையென்ருல், இதில் சேருவதற்கு என்னென்ன தகுதி இருக்கவேண்டும்? வயது நிர்ணயம் ஏதாவது இருக்கிறதா என்பதை அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : பத்தாவது வரை படித்திருக்கவேண்டும் என்று அரசாங்கம் விரும்புகிறது. இதர விபரங்களுக்குத் தனியாகக் கேள்வி போட வேண்டுகிறேன்.

திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து வருகின்ற இந்தக் காலத்தில், விவசாயத்திற்கு என்று தனியாகப் பள்ளி இருப்பதை மாற்றி, எல்லாப் பள்ளிகளிலும் விவசாயத்தை ஒரு தனிப்பாடமாக வைத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் ஏதாவது உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடமில்லை.

குடி நீர் வசதி

* 120 கேள்வி:—திரு மு. கருணநிதி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உலக சுகாதார நிறுவனத்தைச் (WHO.) சேர்ந்த நிபுணர்கள் கோவை குடி தண்ணீர் திட்டத்தைப் பரிசீலனை செய்தனரா ?

(இ) ஆம் எனில், அதன் விவரமென்ன ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம்.

(இ) உலக சுகாதார நிறுவனத்தைச் சேர்ந்த இரு ஆலோசகர்கள் பொதுச் சுகாதாரப் பொறியியல்—நகராட்சிப் பணிகள் துறை அதிகாரிகளுடன் கோயம்புத்தூருக்குச் சென்றனர். அவர்கள் கோவை நகருக்காக நீர் வழங்கல்—கழிவு நீர் விரிவுத் திட்டம் ஒன்றைத் தயாரிக்க உதவி புரிவார்கள். இதை முனைப்புத் (Package Programme) திட்டத்தின் கீழ்ச் சேர்த்து வெளிநாட்டு உதவியுடன் அத்திட்டம் நிறைவேற்றப்படும். இதை முனைப்புத் திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு, இதுபற்றி விரிவான அறிக்கை ஒன்று இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. மு. கருணநிதி : கோவையின் குடிநீர்ப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு கோளத்திலிருந்து உதவி பெறுவது எந்த நிலையில் இருக்கிறது ?